
# வெள்ளி

கறுப்புக் கொடியின் கறுப்பு! (2-ம் பக்கம்)

'மௌனத்கல்யன்' கதை (8-ம் பக்கம்)



கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஆறும் வகுப்புத் 'தமிழ்'

அடக்க விலை 1-98
விற்பனை விலை 6-50

தலையங்கம் 3-ம் பக்கம்

பெப்ருவரி 1973 விலை 30 சதம்

# கறுப்புக் கொடியின் கறுப்பு!

'அமைச்சர் வருகிறார்!' என்ற சென்ற இதழ் தலையங்கத்தில் 'அமைச்சர் குமாரசூரியர் துணிச்சல்காரர்தான்; ஆனால் துணிச்சல் சிலசமயங்களில் விவேகத்தை அழித்து விடுகிறதே!' என்று எழுதியிருந்தேன்.

அமைச்சரின் வேலணை விஜயத்தைப் பொறுத்தமட்டில் அவருடைய துணிச்சலுக்கு வெற்றிதான் கிடைத்திருக்கிறது!


தமிழர் கூட்டு முன்னணியினர் அமைச்சருக்குக் கறுப்புக் கொடி காட்டினார்கள்தான்.

ஆனால்—

அந்தக் கறுப்புக்கொடி சீறிப் பறக்கவில்லையே!

ஏன்?

அதன் பிறகு அமைச்சர் இலங்கரத்தின மட்டக்களப்புக்கு விஜயம் செய்த போது—



கறுப்புக்கொடிச் சகாப்தமும் முடிந்து விட்டதே!

ஏன்?

அமைச்சர் குமாரசூரியர் வெறும் துணிச்சல்காரர் மட்டுமல்ல; அவர் ஒரு சாணக்கியர் போலத் தெரிகிறது!

தமிழர் கூட்டு முன்னணியின் நாடியைச் சரியாகப் பிடித்துப் பார்த்துக் கொண்டுதான் இந்த சாணக்கியர் வேலணைக்கு விஜயம் செய்திருக்கிறாரென்று நம்ப வேண்டியிருக்கிறது!

தமிழர் கூட்டு முன்னணிக்குச் சிறந்த இலட்சியம் இருக்கலாம்.

கடமை உணர்ச்சி இருக்கலாம்.

கண்ணியம் நிறைந்து இருக்கலாம்.

ஆனால் —

கட்டுப்பாடு சரிவர இருக்கிறதா?

ஒரு அரசியல் இயக்கத்துக்கு வேண்டிய கட்டுக்கோப்பும் கட்டுப்பாடும் இருக்கின்றனவா?

தேர்தல் வந்தால்தான் த. கூ. மு. வின் அரசியலில் சூடு பிறக்குமா?

இன்று ஏன் இந்த மந்தநிலை?

கவிஞர் காசிஆனந்தன்முன்பு ஒருநாள் என்னுடன் பேசிக்கொண்டிருந்த போது கட்சியைக் கட்டுக் கோப்பாக அமைக்க வேண்டுமென்பதற்காகவே தாம் தமது வாழ்க்கையை அர்ப்பணிக்கப் போவதாக உணர்ச்சிவசப்பட்டுச் சொல்லிக்கொண்டிருந்தார்.

காசி ஆனந்தன்கள் எல்லாரையுமா அரசாங்கம் அடைத்து வைத்திருக்கிறது?

த. கூ. மு. பேர்ய்க் கொண்டிருக்கிற நிலையைப் பார்த்தால், தமிழ் மக்களுக்கு வேறு ஒரு பற்றுக்கோடு தேவைப்படும் போல இருக்கிறதே?

அமைச்சர் குமாரசூரியர் சாணக்கியர்தான். — இதையெல்லாம் அவர் மிக நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்!

ஆறாம் வகுப்புத் 'தமிழ்' நூலின் அடக்க விலை ரூபா 1.98
இதன் விற்பனை விலையோ ரூபா 6.50!

# கொள்ளை லாபமா, கூடிய செலவா?

நான் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் எதிரியல்ல;—எதிர்க் கட்சிக்காரனல்ல.

அரசாங்கம் செய்கிற நல்ல செயல்களை அவ்வப்போது நான் பாராட்டி எழுதியிருக்கிறேன். தவறு என்று மனதில் பட்டதையும் தயங்காமல் எழுதியிருக்கிறேன்.

ஆரம்பத்திலேயே நான் இதைத் தெரிவித்து விடுவதற்கு காரணமுண்டு. இந்தத்தலையங்கத்தைப் படிக்கும்போது நான் அரசாங்கத்துக்கு எதிர் அணியிலிருந்து கொண்டு ஆட்சியாளரைக் குற்றம் கூறுவதற்காகவே இதை எழுதுகிறேனென்ற நினைப்பு யாருக்கும் வந்துவிடக்கூடாது!

பாடசாலை மாணவர்களுடைய பாடப்புத்தகங்களை கடந்த சில ஆண்டுகளாக அரசாங்கம் வெளியிட்டு வருகிறது.

தனிப்பட்ட வெளியீட்டாளர்கள் கொள்ளைலாபமடிப்பதைத் தவிர்த்து, ஏழை மாணவர்களுக்குக் கை கொடுத்து உதவுவதே இதற்கு முக்கிய நோக்கமென்று அன்று கூறப்பட்டது.

'தமிழ் மலர்' முதலாம் புத்தகத்தை 25 சதத்துக்குத் தந்து பெரிய புதினத்தையே சிருட்டித்தது அரசாங்கம்!

ஆனால் இன்று?

அதே முதலாம் வகுப்பு தமிழ் மலர் 'தமிழ்' ஆகி, ஒரு ரூபா விலைக்கு வந்திருக்கிறது!

இது மட்டுந்தானா?

உதாரணத்துக்கு ஆறும் வகுப்பு மாணவனுக்குத் தேவையான புத்தகங்களின் விலைகளைப் பார்ப்போம்.

| | ரூ . ச |
|---|---|
| தமிழ் | 6 - 50 |
| கணிதம் (2 பாகம்) | 4 - 60 |
| சமூக அறிவியல் | 5 - 50 |
| விஞ்ஞானம் | 5 - 50 |
| விவசாயம் | 2 - 30 |
| ஆங்கிலம் | 5 - 00 |
| சைவசமய போதினி (தனியார்துறை) | 1 - 55 |
| மொத்தம் | 30 - 95 |

ஆறும் வகுப்பு மாணவனுக்கே இத்தனை செலவு என்றால், 7, 8, 9, 10, 11ம் வகுப்புகளில் இந்தச் செலவுகள் எத்தனை மடங்காகி விடுகின்றன.

ஒரு நடுத்தர வகுப்பில் அளவோடு ஐந்து பிள்ளைகளைப்பெற்று அவர்களை மேற்படி ஐந்துவகுப்புகளில் விட்டிருக்கும் பெற்றோர்களின் நிலையென்ன!

இந்த லட்சணத்தில் நடுத்தர வகுப்பினரில் பலருடைய இலவச அரிசியையும் அரசாங்கம் நிறுத்தி விட்டது!

இந்த அவலநிலை ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன?

காரணத்தை அரசியல் பொருளாதார நிபுணர்கள் ஆராய்ந்து கண்டுபிடிக்கட்டும்.

பாடப்புத்தகம் சம்பந்தமகச் சில விஷயங்களை என்னுல் வரையறுத்துச் சொல்ல முடியும்.

உதாரணத்துக்கு ஆறும் வகுப்பு 'தமிழ்' பாடநூலை எடுத்துக் கொள்வோம்.

இது டெமி $\frac{1}{8}$ அளவில் (10+281) 291 பக்கங்களைக்கொண்டது.

இதன் முதலாவது பதிப்பில் 50 ஆயிரம் பிரதிகளை அச்சிட்டிருக்கிருர்கள்!

இந்த 50 ஆயிரம் பிரதிகளை அச்சிடுவதற்கு 925 றீம் டபிள் டெமி 36 ருத். 'வைற் பிறிண்டிங்' கடதாசி தேவை.

இதன் பெறுமதி கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் விலைப்படி (குறைந்த பட்சம் 5 வீதம் கழிவுடன்) ரூபா 61975 ஆகிறது.

மேலட்டைக்குரிய கடுதாசிக்கு ரூபா 4375 ஆகும்.

ஆக மொத்தம் கடதாசிச் செலவு ரூபா 66350.

இந்த 50 ஆயிரம் பிரதிகளையும் ஒரு சாதாரண அச்சகத்தில் அச்சிடும் செலவு ரூபா 32700 ஆகும்.

ஆகவே 50000 பிரதிகளுக்கும் அடக்க விலை ரூபா 99050

ஒரு பிரதியின் அடக்க விலை ரூபா 1-98 மட்டுமே!

கொழுத்த லாபமீட்டும் மிகமிகப்பெரிய வெளியீட்டாளர்கள் அடக்க விலையின் மூன்று மடங்காக விற்பனை விலையை நிர்ணயிக்கிருர்கள்.

இந்நாட்டில் ஏழைமக்களுக்கு உதவுவதற்காக நிறுவப்பட்ட கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொள்ளை லாப முதலாளிகளையும் மிஞ்சி மேலே போயிருக்கிறதே!

அப்படியில்லையெனில்,

இவர்களுடைய உற்பத்திச் செலவு அளவுக்கு மிஞ்சியிருக்கிறது!

இதே நாட்டில் வசதிகள் பல குறைந்த ஒரு சாதாரண அச்சகத்தில் இதே புத்தகத்தை, இதே தரத்தில் ரூபா 1-98 க்குத் தயாரிக்க முடியுமென்றுல் அரசாங்கம் எதற்காக இதைக் கூடுதல் விலையில் தயாரித்து ஏழை மாணவர்களின் தலையில் அந்தச் சுமையைப் போடவேண்டும்?

இதே புத்தகத்தை தனியார் துறையினரிடம் கொடுத்தால் [illegible]லு ரூபாவுக்குப் பறக்கப் பறக்க விற்பார்கள்!

இந்த விஷயத்தை எனது சொந்த அனுபவங்களைக் கொண்டு நான் துணிந்து திடமாகக் கூறமுடியும்!

எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் யாராவது இந்த விஷயத்தைப் பாராளமன்றத்தில் எடுத்துப் பேசலாம்!

நான் தந்திருக்கும் விபரங்கள் வெறும் ஏட்டுச் சுரக்காயல்ல! நடைமுறைக்குச் சாத்தியமானவைகளே!

அரசாங்கத்தின் ஒரு சிறுதுறையில் ஒரு சிறிய உதாரணம் இது. இதே போன்ற எத்தனையோ துறைகளில் அரசாங்கம் ஏக போக உரிமையை வைத்துக் கொண்டு பொருட்களின் உற்பத்திச் செலவைப் பலமடங்கு அதிகமாக்கிக் கொண்டிருக்கிறது.

தனியார் துறையினர் அரசாங்கத்துடன் போட்டி போட வழியில்லாமல் கதவு அடைக்கப்பட்டிருக்கிறது.

மிதமிஞ்சிய உற்பத்திச் செலவால் ஆனை விலை குதிரை விலையாகிவிட்ட பொருள்களெல்லாம் இந்த நாட்டு மக்களின் தலையிலே கட்டப்படுகின்றன.

வேறுவழியில்லை. மக்கள் வாங்கத்தான் வேண்டும்!

ஏன் இந்த நிலை?

தொழில்கள் யாவும் பொதுத்துறைக்கு வருவதை நான் ஆதரிக்கிறேன்.

ஆனால், இன்றைய நிலையில் இந்நாட்டு மக்கள் பலர் 'பொதுத் துறை'க்குத் தயாராக இல்லையென்பதை வெட்கத்துடன் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

பொதுத்துறையில் நஷ்டம் விளைந்துள்ள சந்தர்ப்பங்களில் 'போகட்டும், கவுண்மேந்துக் காசுதானே!' என்ற வார்த்தைகளைக் கேட்பது சர்வசாதாரணம்.

சிறு தொழிலாளி முதல் பெரிய அதிகாரிகள் வரை பலர் இந்த மனப்பான்மையோடுதான் இருக்கிறார்கள்.

இந்த மனப்பான்மையுள்ள நாட்டில் ஒருபோதுமே பொதுத் துறை முன்னேற முடியாது!

இந்த மனப்பான்மையை மாற்ற முன்னர், எல்லாத் தொழில்களையும் பொதுத்துறைக்கு ஏகபோக உரிமையாக்கிவிட நினைப்பது'

ஓ, எவ்வளவு பயங்கரமான செயல்! ●

---

**அடுத்த இதழில்**

**சு. குகதாசன்** எழுதும் **அறிவுக்கட்டுரை**

# எங்கே செல்வோம்?

"மாத்தளை செல்வம்"

**நேற்று**

காடு கண்டு களனி கண்டு
களிப்பினையும் கண்டு — தூய
வீடு கண்டு விருப்பம் கொண்டு
வியந்திருந்தோம் உண்டு — மக்கள்
ஏடு கண்டு ஏற்றம் கண்டு
ஏற்றிருந்தோம் தொண்டு—அதில்
நாடு கண்டு நலமுங் கண்டு
நயந்திருந்தோம் அன்று

**இன்று**

காடழித்தால் கால்வயிறும்
கஞ்சிக்காக அலையும் — நல்
வீடென்றால் வெறுப்பினிலே
வெந்துசாகும் மனமும்—புதின
ஏடெடுத்தால் இல்லையெனும்
ஏக்கமுற்ற குரலும்—இன்று
நாடெங்கும் ஒலித்திருக்கும்
நாமெங்கு செல்வோம்?

**நாளை**

அன்றுகண்டு அகமகிழ்ந்து
அருள்கண்ட வாழ்வும்—நாடு
சென்றெட்டும் பொருள் கொணர்ந்து
செழித்திருந்த வாழ்வும்—இன்று
வாழ்ந்திருக்கும் எங்களுக்கு
வஞ்சித் திட்டபோது—நாளை
வாழவரும் வழிமுறைக்கு
வந்திடுமோ கனவாய்!

தமிழ்நாட்டிலுள்ள 'ஊட்டி'க்கு ஒருமுறை போயிருந்தேன். எங்கள் நுவரெலியா போன்ற இடம். சீசன் தெரியாமல் போய்விட்டேன். ஓகஸ்ட் மாதம். அப்பப்பா, குளிரோ குளிர்! பெனியனுக்கு மேமேலே ஷேட், அதற்கு மேலே ஸ்வெட்டர், அதற்கும் மேலே இன்னெரு ஸ்வெட்டர். அதற்கும் மேலே கம்பளிப் போர்வை. — இவ்வளவோடு காற்றே புகாமல் அறையைமூடிக்கொண்டு இருந்தாலும் என்ன மாதிரிக்குளிர்கிறது! ஆனல் அதே நேரத்தில் சாதாரணமான ஒரு பெனியனை மட்டும் போட்டுக்கொண்டு வெளியே உலவிக் கொண்டிருந்தார்கள் சிலர். அவர்கள் அந்த ஊர்க்காரர்கள். அந்த உடம்புஅப்படிப்பழகியிருக்கிறது. இந்த உடம்பு இப்படிப் பழகியிருக்கிறது. மனிதர்களுடைய மனம் மட்டுமல்ல, உடம்பும்கூட சூழலுக்கு ஏற்றமாதிரித் தன்னைப் பழக்கப் படுத்திக் கொண்டுவிடுகிறது!

காஞ்சி காமகோடி பெரியவரைக் காணப்போகிறவர்கள் சாஸ்டாங்கமாக அவர் காலடியில் வீழ்ந்து வழங்குவதுவழக்கம். ஆனல் கிருபானந்வாரியார் ஒருமுறை தம்மைப் பார்க்க வந்தபோது நிலத்தில்விழுந்து வணங்க வேண்டாமென்று பெரியவர்சொல்லிவிட்டார். வாரியார் தமது மார்பில் அணிந்திருக்கும் உருத்திராட்சமாலையில் சிவலிங்கம் ஒன்றைப் பதித்திருக்கிருர். வாரியார் விழுந்து வணங்கினல் அந்தச் சிவலிங்கம் நிலத்தில் பட்டுவிடுமே என்றுதான் பெரியவர் அப்படித் தடுத்திருந்தார்!



எம். ஜி. ஆர். ஆனந்த விகடனில்தொடர்ந்துதம்மைப்பற்றி எழுதி வருகிருர். அந்தக் கட்டுரையொன்றில் ஆனந்த விகடனையே அவர் தாக்கி எழுதியிருக்கிருர். ஆனந்த விகடன் அதையும் வெளியிட்டிருக்கிறது. இது ஆனந்த விகடனின் பெருந்தன்மையைக் காட்டுகிறதா?-இல்லை. அதனுடைய பெலயீனத்தைத் தான் காட்டுகிறது!

மது அருந்துவதையும், சிகரெட் புகைப்பதையும் வெறும் பிரசாரத்தினுல் நிறுத்திவிடமுடியாது. கடுமையானபிரசாரத்தின் மூலம்கூட ஆயிரத்தில் ஒருவர் இந்தப் பழக்கத்தை விடுவாரோ என்பது சந்தேகமே. சட்டத்தின் மூலம் இவற்றை முற்ருகத் தடைசெய்தால் ஓரளவு பலன் உண்டு. ஆனுல் அதன்மூலம் வேறுபல பிரச்சினைகள் எழுந்து விடுவது வழக்கம். மதுவிலும், புகையிலையிலும் உள்ள அபாயத்தன்மைகளை நீக்கி விடுவதுதான் சிறந்தவழி. விஞ்ஞானிகள் அதற்காகவே இப்போது ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிருர்கள்.

# ஒரு கள்வன் உதவிக்கு வருகிறான்!

சாவியை ஒரு முறை திருகினேன்.

அலுமாரி திறக்கவில்லை.

மறுபடியும்,

இந்த முறை சாவி இசகு பிசகாக எங்கோ சிக்கிக் கொண்டு விட்டது.

எனக்கு ஆத்திரம், ஆத்திரமாய் வந்தது.

'ஒரு அவசரத்திற்கு உதவ முடியாத சாவி, என்ன சாவி?'

சுவரில் மாட்டியிருந்த ஜெயலலிதாவின் படத்தைப் பார்த்துப் பல்லைக்கடித்தபடி சாவியைத் திருகினேன்.

அந்த நேரம் ஜெயலலிதா என்னைப் பார்த்திருந்தால் நிச்சயம் பயந்திருப்பார்.-நல்லவேளை, பார்க்கவில்லை.

படக்!

சாவி முறிந்து, அரைவாசி சாவித் துவாரத்தினுள் தங்கி விட்டது!

எனக்கு வந்த ஆத்திரத்தில் முறிந்த சாவியைத் தூக்கி எறிந்தேன். அது 'லெக்-பிறேக்' போட்டது போல் திரும்பி எங்கோ இருட்டில் விழுந்தது.

எனக்கு அவசரமாய்ப் பணம் மிகவும் தேவை.

பணம் அலுமாரியினுள்!

சாவி ?

இனித் தச்சுவேலை செய்பவனைத்தான் போய்க் கூட்டிக் கொண்டு வரவேண்டும், திறப்பதற்கு.

நேரத்தைப் பார்த்தேன்.

10-35—இரவு 10-35'

இந்த நேரத்தில் எவனைப் போய்க் கூப்பிடுவது? அப்படிக் கூப்பிட்டாலும் நான்......

'இந்தநேரத்தில் உனக்கெதற்குக் காசு' என்கிறீர்களா? பொறுங்கள், கதையின் முடிவில் சொல்கிறேன்—அதற்குள் ஒற்றையைப் புரட்டாதீர் ஐயா!

என்ன செய்யலாம்?

'டொக்! டொக்!'

மெல்லிய, லேசான சத்தம் கேட்டது.

என்ன சத்தம்? எங்கே இருந்து வருகிறது?

ஹோலுக்குள் வந்து பார்த்தேன்.

ஒரே இருட்டு.

லைட்டைப் போடவா?

வேண்டாம் என்னவென்று முதலில் பார்த்துவிட்டு...

இருட்டில் எதைப் பார்ப்பது?

மேலே பார்த்தேன்.

இரண்டு ஓடுகள் கழற்றப்பட்டுக் கிடந்தன.

நாலு நட்சத்திரங்களை அதனூடு பார்க்கக் கூடியதாய் இருந்தது.

அப்போது,

ஒரு கை நீண்டு வந்தது.

மேலும் இரண்டு ஓடுகளைக் கழற்றியது.

திருடன்!

நீங்கள் என்ருல், சத்தம் போட்டு ஊரைக் கூட்டுவீர்கள்; இல்லையா?

நான் அப்படியில்லை. என்னுடைய குணமே வேறு. நான் மனத்தில் வேறுஒரு முடிவுசெய்தேன்,

அந்த உருவம் மேலே ஒரு கயிற்றைக் கட்டியது.

ஓஹோ! இறங்கி வரப்போகிருயா? வா!

'நீ வரவேண்டும் என்றுஎதிர்பார்த்தேன்' — என்று சுசீலாவின் குரலில் பாடவேண்டும் போலிருந்தது. செய்யவில்லை.

சுற்று முற்றும் பார்த்தேன்.

ஒரு 'கிரிக்கட் மட்டை' — [Bat] கிடைத்தது. எடுத்துக் கொண்டேன். இவனில் சிறிது கிரிக்கட் பழகுவோம்.

அவன் மெல்லக் கயிற்றில் இறங்கத் தொடங்கினுன்.

முழுவதும் இறங்கியவுடன்,



"ரஷ்யாவில் பலமொழி பேசும் பல இன மக்கள் வாழ்கிருர்கள். அவர்களிடையே பல மதங்கள்இருக்கின்றன. ஆயினும் அந்த நாட்டில் இன, மொழி,மதங்களில் எவ்வித ஏற்றத் தாழ்வுமில்லை. அங்கே உள்ளது போன்ற ஆட்சிமுறைதான் இலங்கைக்கும் தேவை" என்று சமீபத்தில் கூறியிருக்கிருர் தோழர் வ. பொன்னம்பலம். அவர் சொல்வது போன்ற ஒரு நிலையைத்தான் தமிழர் கூட்டு முன்னணியினரும் கேட்கிருர்கள். ஆனுல் அதை அடைவதற்கு வி. பி. பெரும்பான்மையுடன் நயந்து போகவேண்டுமென்கிருர். தமிழர் கூட்டு முன்னணியினர் 'உரிமைப் போராட்டம்' என்கிருர்கள். எது சிறந்த வழி? காங்கேசன்துறைத் தொகுதி மக்கள் இடைத்தேர்தலில் வழங்கும் தீர்ப்பு இதற்குப் பதிலாக அமையுமா?

---

'பட்'டைத் தூக்கி,

'மொட்'

— அம்பயர் இருந்திருந்தால் 'ஸிக்ஸர்' காட்டியிருப்பார்.

ஒரு சத்தமும் போடாமல் ஆள்அப்படியே கீழேவிழுந்தான்.

## ••• மௌனக்கல்யன் ••

அவனை இழுத்துக் கொண்டு அறையினுள் நுழைந்தேன்.

அங்குள்ள மின்சார வெளிச் சத்தில் அவனைக் கிடத்தி...

'ஒரு ஸ்போட்ஸ்' பெனியனும், நல்ல கட்டம் போட்ட சாரமும் அணிந்திருந்தான். — சாரத்தை எங்குதான் வாங்கினுனே தெரியவில்லை. நன்றுயிருக்கிறது. நானும் ஒன்று வாங்கவேண்டும்—

முகத்தைப் பார்த்தேன்.

நாலு நாள் 'ஷேவ்' எடுக்கவில்லை என்று தெரிந்தது. தலையில் வழுக்கை விழத்தொடங்கி இருந்தது. ஒரு 35 வயசு மதிக்கலாம். மண்டை கொஞ்சம் வீங்கியிருந்தது. இரத்தம் வரவில்லை.

கொஞ்சம் தண்ணீர் எடுத்து முகத்தில் தெளித்தேன். சிறிது அசைந்தான்.

மேலும் தண்ணீர்.

மெல்லக் கண்ணைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான் பிறகு என்னை. பிறகு திடுக்கிட்டான்.

கைகளை ஊன்றிச் சிறிது எழும்பினுன்.

"என்னத்துக்கடா வந்தாய்?" என்றேன் மிரட்டலாக. — அநாவசியமான கேள்வி.

''தம்பி! நான் ......''

''பொறு... உன்னைப் பொலிசிலே பிடிச்சுக்குடுத்து ...'' என்று முடிக்குமுன், ''என்ரை ஐயா, அப்பிடிச் செய்து போடாதேங்கோ தம்பி. நான் பிள்ளை குட்டிக்காரன்'' என்று மெல்லிய குரலில் சொன்னுன்.

''என்ன துணிவிலை 10-30 மணிக்கே ஓடு கழற்றி இறங்கினனீ?''

''இல்லைத் தம்பி. நீங்கள்எல்லோரும் ஊருக்குப் போய் இரண்டுநாளாச்சுது. வீடும் பூட்டியிருந்தது. அதுதான் நான் துணிஞ்சு... நீங்கள் மட்டும் திரும்பி வந்திருப்பியள் எண்டு நான் கனவிலும் நினைக்கயில்லை, தம்பி.''

''ஓ, எல்லார் விசயமும் 'நோட்'பண்ணிப் பெரிய 'பிளான்'தான் போட்டிருக்கிறுய்!''

''இல்லைத் தம்பி. என்னை விட்டுவிடுங்கோ. நான் இனி இந்தப்பக்கம் தலைவச்சும் படுக்கமாட்டேன்...''

விட்டு விடவா?

இருந்தாற்போல, எனக்கு ஒரு புதிய யோசனை பிறந்தது.

'இந்த அலுமாரியை, இவனைக்கொண்டு திறந்தால் என்ன?'

நல்ல யோசனைதான்!

''டேய், இங்கே வா,உன்ரை பெயரென்ன?''

"சிவலிங்கம் ஐயா!''

'சிவலிங்கம்! இந்தச் சாரத்தை எங்கை வாங்கினுய்?'— என்று கேட்காமல்,

''இஞ்சை பார், சிவலிங்கம்! இப்ப நீ எனக்கு ஒரு சின்னவேலை செய்ய வேணும். செய்து தந்தாயெண்டால் உன்னைச்சும்மாவிட்டு விடுவன், இல்லையெண்டால் பொலிசில்...'' என்று இழுத்தேன்.

''என்ன வேலையெண்டு சொல்லுங்கோ தம்பி!'' — அலுமாரிக்குப்பக்கத்தில் அவனைக் கொண்டு போனேன்.

"இதைத் திறக்கவேண்டும்!''

அவன் தன் வாயைத் திறந்தான், முகம் சுருங்கியது. ,,தம்பி விளையாடுநீர்போல இருக்கிறது', என்றான் மிகத் தயங்கிய குரலில்.

''எனக்கு விளையாட நேரமில்லை சிவலிங்கம். எனக்கு இப்ப அவசரமாய்க் காசு தேவை—அதுதான் ஊரிலே இருந்து திரும்பி வந்தனான்—வந்த இடத்தில் சாவி முறிஞ்சுபோச்சு. இப்பநீதிறக்கிறதெண்டால் திற-இல்லாட்டி ...''

''சரி தம்பி, நான் திறக்கிறன். ஆனால் பிறகு இதிலை என்னை மாட்டிப் போடாதேங்கோ'' என்ற சிவலிங்கம் அலுமாரியை அணுகினான்.

"கொஞ்சம் பொறு'' என்று அவனைச் சிறிது நிறுத்தி, அவனருகில் போனேன்.

அவனை ஆராய்ந்தேன்.

'ஏதாவது அபாயகரமான ஆயுதங்கள் வைத்திருந்தால் ...... அலுமாரியைத் திறந்த பிறகு என்னை அடித்து வீழ்த்திவிட்டுக் காசு முழுவதையும் அவனே கொண்டு போனால் ..'

அவனிடம் ஏதுமில்லை, ஒரு ஸ்பானர், சாவிக்கொத்து இவைகளைத்தவிர.

இதற்கு ஒரு முடிவு எடுப்போம்.

''சரி, திற!''

சில நிமிடங்கள் அலுமாரியோடு அவதிப்பட்டான்.—பிறகு

கிளிக்!

பூட்டுத்திறந்த சத்தம் கேட்டது.



இன்றைய சிறந்த நடிகைகளில் வாணிஸ்ரீ ஒருவர். இவர் தெலுங்குப் பெண். அநேக தெலுங்குப் படங்களில் நடித்திருக்கிறார். ஆனால் தெலுங்குப்படங்களில் இவருக்குக் கிடைத்த பாத்திரங்கள் பெரும்பாலும் கவர்ச்சிப் பாத்திரங்களே. மிக ஆபாசமாகவெல்லாம் நடித்திருக்கிறார். ஆனால் சிலருக்கு அந்த மாதிரி 'கவர்ச்சி' நடிப்புகள் மட்டுமே வரும். வாணிஸ்ரீ எந்த மாதிரியான பாத்திரத்தைக் கொடுத்தாலும் திறம்பட நடிக்கக்கூடியவர்!

---

உடனே அலுமாரியைத்திறக்கப் போனான்.

''நில் என்றேன். திரும்பினான்.

கையில் வைத்திருந்த கிரிக்கட்மட்டையால், அவன் தலையை நோக்கி வீசினேன்.

இம்முறைகுறிதப்பிவிட்டது.

அவன் - சிவலிங்கம் - லாவகமாகத் திரும்பி, என்னிடம் பாய்ந்து,

வயிற்றிலே ஒரு உதைவிட்டான். என் அம்மாவை ஒரு முறைநினைத்தேன். அடியை வாங்கிக்கொண்டு குனிந்தபோது, என்

முதுகிலே இன்னொன்றை வெடித்தான் அவன். நான் கீழே விழுந்த போது, அவன் காலை வாரிவிட்டேன்.

அப்படியே முகம் அடிபட விழுந்தான்.

இப்போது என் முறை:

சப்பாத்துக் காலால், அவனுடைய பின்புற இடுப்பில் ஓங்கி ஓர் உதை. சரியான உதைதான்! நல்லாக வலித்திருக்கும் என்று எனக்குத் தெரியும் - சிறுவயதில் அப்பாவிடம் ஒருமுறை இப்படித்தான் உதைவாங்கினேன்.

பிறகு மெதுவாக அவனை எழுப்பி, அவனுடைய முகத்தைத் திருப்பி,

என்னுடைய கையை உறுதியாக மடக்கி, அவன் முகத்திலே சிதறினேன்.

அவன் நிலைகுலைந்தான்: மூக்கால் இரத்தம் வடியத் தொடங்கியது.

மறுபடியும் கிரிக்கட் மட்டையைத் தூக்கி, அவன் மேல் வீசினேன்வேகமாக. சாய்ந்தான்.

ஒரு சிறிய சண்டைக்காட்சி, இனிதாக முடிந்தது. பிறகு கீழ் வரும் வேலைகளை மிக வேகமாகச் செய்தேன்.

நீளமான கயிற்றினால் அவனை ஒரு கதிரையோடு கட்டிப் போட்டேன் பலமாக.

அலுமாரியைத் திறந்து பணம் முழுவதையும் எடுத்து, நான் கொண்டுவந்த 'ஜேம்ஸ்பொண்ட்' சூட்கேஸில் அடுக்கினேன், சிரமத களைப்புத்தீர ஒரு சிகரெட்டை எடுத்துப் புகைத்தேன்.

புகை வளையம், வளையமாக மேலெழும்பியது.

இனி, இவனை என்ன செய்வது?

அவனுடைய தலைசிறிதுஆடியதுமெல்லக் கண் விழித்தான்.

'நல்ல பலசாலிதான். இவ்வளவு அடியையும் வாங்கிக்கொண்டாலும் நினைவு தப்பவில்லையே?' கண்களை அகலத்திறந்து மேலும், கீழும் பார்த்தான். அவனது நிலைமை, அவனுக்கு மிகவும்புரிந்தது:

''என்ன தம்பி, இப்படிச் செய்து போட்டீங்கள்? என்னைப் பொலிசிலே பிடிச்சுக்குடுக்கப் போறியளே?''

நான் முகத்தில் ஒரு அசைவும் இல்லாமல் சொன்னேன், ''பொலிசிடம் உன்னை அனுப்பவில்லை. பொலிசே, இங்கே வரும்''

''என்ன தம்பி?''

நான் மெதுவாகச் சூட்கேசைக் கையில் எடுத்தேன். பிறகு சொன்னேன்:

''என்னை இந்தவீட்டுக்காரன் என்று நினைத்தாய்? அட, மடையா! நானும், உன்னைப்போல ஒரு கள்ளன்தான். 'வீட்டுக்காரன் யார், கள்ளன் யார்' எண்டு தெரியாமல் களவெடுக்க வராதே. உன்ரை உதவிக்கு மிகவும் நன்றி. இங்கேயே கிடந்து, நாளைக்குப் பொலிசோடு கதை. நான் போட்டுவாறன்''


சிரித்துக் கொண்டே, கயிற்றைப் பிடித்து மேலேறி, ஓட்டுத் துவாரத்தின் வழியே மேலே வந்தேன்.

▮ நான் நிதி அமைச்சராக இருப்பதைவிட ஒரு தொழிற் சங்க வாதியாக இருந்திருக்கலாம், என்று டாக்டர் என், எம், பெரேரா கூறியிருக்கிறார். சற்று ஆறுதலாக இருந்து சிந்தித்துப் பார்ப்பதற்கு அவருக்குக் கொஞ்ச நேரம் கிடைத்திருக்கிறது போலிருக்கிறது! இனிச் சிந்தித்து என்ன பயன்?

▮ தமிழ்ப் படங்களில் முத்தக் காட்சிகள் வருவதை விரும்பமாட்டோம், என்று பல 'பத்தினி' நடிகைகள் அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்கள். 'கதாநாயகியின் நெற்றியிலும்' கன்னத்திலும், கழுத்திலும், இடையிலும், கதாநாயகன் முத்தமிட அனுமதிப்பவர்கள் உதட்டிலும் முத்தமிட அனுமதித்தால் என்ன கெட்டுவிடும்' என்று கேட்டிருக்கிறார் தமிழ் நாட்டின் நீதிபதி ஒருவர். ஒரு காலத்தில் அதிகமாக நெருங்கி நடிக்காமலே காதல் காட்சிகளை முடித்து விட்ட நடிகைகள் இன்று சர்வசாதாரணமாக கதாநாயகனுடன் இரண்டறக் கலந்து விடுகிறார்கள். முத்தக்காட்சிகளும் விரைவில் வந்துவிடும்!

▮ 'நாடகக்கலைக்கு பொது மக்கள் ஆதரவு . தருவதில்லை' என்று குறை கூறப்படும் காலத்திலேயே ஒரு நாடகத்தை இரண்டு நாட்கள் தொடர்ந்து நடாத்தி, இரண்டுநாளும் 'ஹவுஸ் ஃபுல்' ஆக்கிய திறமை 'பிறவுண்சன் கோப்பி'க்காரர்களைச் சேரும். 'புளுகர் பொன்னையர'வை நான் பார்க்கவில்லை. (எனக்கும் டிக்கட் கிடைக்கவில்லை!) ஆனாலும் நாடகம் ஒரு வெற்றிகரமான தயாரிப்பு என்று எழுதுவதற்கு உள்ளே போயா பார்க்க வேண்டும்? இந்தநாடகத்தை எழுதி, இயக்கி கதாநாயகனுகவும்நடித்த 'வரணியூரான்' மிகுந்த பாராட்டுக்குரியவர்!

▮ அமைச்சர் குமாரசூரியர் யாழ்ப்பாணப்பகுதிக்கு விஜயம் செய்த போது ஒரு பெண்மணி அவருடைய கழுத்தில் மாலையிட்டது பற்றி சுதந்திரன் மிகமோசமாக எழுதியிருக்கிறது. சுதந்திரனை நான் பல சந்தர்ப்பங்களில் பாராட்டியிருக்கிறேன். ஆனால் இந்தச் செய்திக்குறிப்பு நேர்மையானதல்ல என்பதை



என்னல் குறிப்பிடாமலிருக்கமுடியவில்லை. சில வருடங்களுக்கு முன்னல் யாழ். நகரமண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி மகாநாட்டில் சொல்லின் செல்வர் இராசதுரைக்கு யாழ்ப்பாணத்துப் பெண்கள் சிலர் மாலை சூட்டினர்களே! சுதந்திரன் கண்டித்ததுண்டா? ஒருவரைத் தாக்கவேண்டுமென்பதற்காகவே 'நியாயம்' தவறிப்பேசுவது அழகல்ல. இப்படி எழுதி வந்தால் பண்புள்ள தனது அபிமானிகள் பலரைச் சுதந்திரன் இழக்க நேரிடும்!

# பழைய நினைவுகள்



## இலக்கியச் செல்வர் கனக. செந்திநாதன்

1943-1944 என்னும் ஆண்டுகளுக்கிடையில் நடைபெற்ற தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச்சங்கம் தன்னுடைய நான்கு நோக்கங்களையும் நிறைவேற்றும் முகமாகத் தீவிரமாகச் செயல்பட்டது. முதல் வருடத்தில் மாதா மாதம் அங்கத்தவர் கூடி பலமான இலக்கியச் சர்ச்சைகளில் ஈடுபட்டனர். ஆசிரியர் வை. ஏரம்பமூர்த்தி, ப. வீ. பொன்னுத்துரை ஆகிய அன்பர்கள் மிகுந்த உற்சாகம் காட்டினர். அவர்களின் உற்சாகமிகுதியினால் சிறந்த முறையில் பாரதி விழா கொண்டாடப்பட்டது.

11-9-43 சனிக்கிழமை யாழ்ப்பாணம் கில்னர் மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது. இவ்விழாவின் சிறப்பு என்னவெனில் மகாகவி பாரதியாரின் நினைவுநாள் விழாவுக்கு ஈழத்துப் பெரும் புலவர் நவாலியூர் சோமசுந்தரனார் தலைமை தாங்கியதாகும். அவர் தமது தலைமைப் பேருரையில் பாரதியாரது கவிதா மேதையை வியந்துரைத்து அவரது வேதாந்தக்கொள்கைகளைப்பற்றியும் வேதாந்தப் பாடல்களைப்பற்றியும்சிறப்புற எடுத்துக்காட்டினார். அக்கூட்டத்தில் புலவரது மகனார் சோ. நடராசன் அவர்களும் இலக்கிய விமர்சகர் பொ. கிருஷ்ணன் அவர்களும் பண்டிதர் த. சுப்பிரமணியம் அவர்களும் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றியமை குறிப்பிடக்கூடியதாகும். சொற்பொழிவுகள் மாத்திரமன்றி இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெற்றன.

மறுமலர்ச்சிச் சங்கம் தோன்றி மூன்று மாதத்துக்கிடையில் இளைஞர்களாகிய எழுத்தாளர்கள் சிறந்த முறையில் எடுத்த பாரதி விழா சங்கத்தின் புகழை மேல் ஓங்கச்செய்தது. வீரகேசரி, ஈழகேசரி, இந்துசாதனம் ஆகிய பத்திரிகைகள் இவ்விழாவைப் பற்றி விபரமாக எழுதியிருந்தன. திருச்சியிலிருந்து வெளிவந்து

கொண்டிருந்த இலக்கியப்பத்திரிகையான **கலாமோஹினியும்** இவ் விழாவைப்பற்றி எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். சங்கத்தின் புகழ் யாழ்ப்பாணப் பகுதியில் ஓரளவு பரவவே பலர் அங்கத்தவர்களாக வந்து சேர்ந்தனர். நானும் நெடுந்தீவில் இருந்துமாற்றலாகிச் சங்கானைக்கு வந்தமையால் சங்கத்தின் நிர்வாகசபைஅங்கத்தவராகித்தீவிரமாக ஈடுபட்டேன்.

இந்தப் பாரதிவிழாவை அடுத்துப் பசுமை நினைவாக இன்னும் என்மனதில் இருப்பது சுவாமி விபுலானந்தா அவர்கள் எங்கள் சங்கத்துக்கு வருகைதந்து, இளம் எழுத்தாளர்களாகிய எங்களைப் பெருமைப்படுத்திய செயலாகும். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகச் சுவாமியவர்கள் நியமனம்பெற்றமையைக் கொண்டாடும் முகமாக யாழ்ப்பாண அறிஞர், பெருமக்கள் ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர். அச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி மறுமலர்ச்சிச் சங்க இளைஞர்களும் தங்கள் சங்கத்துக்கும் வருகை தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். சுவாமி அவர்களும் ஒப்புதல்அளித்தார்கள். ஆனுல்-தமக்குப் பல வேலைகள் இருப்பதாகவும் காலை 8 மணிக்கே சங்கத்துக்கு வரமுடியுமென்றும் கூறினுர்கள். பல கிராமங்களில் இருந்து வரவேண்டியவர்களாக நாங்கள் இருந்தபோதிலும் அதை ஒப்புக்கொண்டோம். சுவாமியவர்கள் எங்கள் சங்கத்துக்கு வந்து ஆசிகூறுவதையே பெரியபேறு என நாங்கள் நினைத்தோம்.

2-10-43 சனிக்கிழமை இரவே ரேவதி குப்புச்சாமி அவர்களின் வீட்டில் எல்லாஅங்கத்தவர்களும் கூடி அவ்வீட்டின் நீண்ட விறுந்தையை ஓரளவு அலங்கரித்து அங்கே நித்திரை செய்தோம். விடிந்தது. ஞாயிற்றுக்கிழமை காலை சுவாமியவர்கள் வரவை எதிர்பார்த்திருந்தோம். ஒரு மேசை இரண்டுகதிரைகள்அவ்வளவுதான்.அங்கத்தவர்கள் உட்காரப் பாய் விரித்திருந்தோம்.

சரியாக 8-30 மணியளவில் விபுலானந்த அடிகளார் வருகை தந்தார். ஆசிரியர் வை. ஏரம்பமூர்த்தி அவர்கள் அடிகளுக்கு மாலைசூட்டி வரவேற்முர். புன்னகைதவழும் முகத்தினராய் வந்த அடிகளார் என்ன நினைத்தாரோ மேசை கதிரைகளை ஒதுக்கிவிட்டு இளைஞர்களாகிய எங்களுடன் வெறும்பாயிலே உட்கார்ந்துவிட்டார். 'எழுத்தாளர்களுள் பெரியவர் சிறியவர் என்ற பேதம்ஏன்?' என அவர் நினைத்திருக்கலாம். அவர் பெருந்தன்மை எங்கள் நெஞ்சங்களையெல்லாம் புல்லரிக்கச் செய்தது. ஒரு மணித்தியாலத்துக்குமேல் அங்கத்தவர்களுடன் அவர் கலந்துரையாடினுர். தாம் சமீபத்தில் பண்டிதமணி கதிரேசன்செட்டியார்அவர்களது மலரில் எழுதிய ஆங்கில வாணியைப்பற்றிக்குறிப்பிட்டார். மறுமலர்ச்சித் தமிழின் சில அம்சங்களைப்பற்றித் தமதுகருத்துக்களை வெளியிட்டார். அவர் வெளியிட்ட கருத்துக்களில் முக்கியமான பகுதி இது:

''தமிழில் வெளிவரும் கதைகளில் அநேகம் இந்தியாவிலேயே எழுதப்படுகின்றன. அவை அந்நாட்டு வாழ்வினை நமக்குத் தெரிவிக்கின்றன. நம்மைப்போலவே இந்தியர்களும் ஈழத்து மக்களின் வாழ்வையும் வளங்களையும் அறிய விரும்புவர். எனவே நமது வாழ்வை உள்ளபடி சித்தரிக்கும் உயர்ந்த கதைகளை மறுமலர்ச்சித் தொண்டர்கள் வெளிக்கொணர வேண்டும்''

சுவாமியவர்கள் எங்களையெல்லாம் வாழ்த்தி விடைபெற்ருர். அவர் புதுமைத் தமிழ் சம்பந்தமாகச் செய்த கலந்துரையாடல் மிகப் பயனுள்ளதாக இருந்தது. மறுமலர்ச்சிச் சங்க விழாக்களைப் பட்டினத்தில் மாத்திரம் நடத்தாமல் கிராமப் புறங்களிலும் விஸ்தரித்து நடத்த வேண்டும் என அங்கத்தவர்கள் பேரவாக் கொண்டிருந்தனர். அந்த அவாவின் காரணமாக அடுத்துவந்த நாவலர்விழா அளவெட்டி மகாஜன சபை வாசிகசாலைமண்டபத்தில்கொண்டாடப்பட்டது. வித்தியாதரிசியும், பெருமைப்பாளரும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தை ஆக்கி இந்நாட்டில் பண்டிதர்களையும், பாலபண்டிதர்களையும் அளித்தவருமாகிய தி. சதாசிவ ஐயரவர்கள் தலைமை தாங்கியது மறுமலர்ச்சிச் சங்கத்தாரின் நற்பேருகும். இவ்விழாவில் உலகியல் விளக்கம் கண்ட பெரும் புலவரான நவநீதகிருஷ்ண பாரதியவர்கள் நாவலர் அவர்களினது வாழ்க்கையின் புனிதத்தன்மையைப்பற்றியும் அவரது பலவகைத்தொண்டுகளைப் பற்றியும் விரிவுரை நிகழ்த்தியது குறிப்பிடக்கூடியதாகும். இவ்விழாவில் பல இசைக்கச்சேரிகள் முன்னிடம் பெற்றன.



முன்பெல்லாம் துணைநடிகராக, வில்லனுக நடித்து வந்த முத்துராமன் இப்போது முக்கியமான பாத்திரங்களில் நடித்து வருகிருர். அவருடைய தோற்றத்தில் மட்டுமல்ல; நடிப்பிலும் நல்ல மெருகேறி வருகிறது! சுயமுயற்சியால் மெல்ல மெல்லத் தன்னை வளர்த்து நிற்பவர் முத்துராமன்!

அளவெட்டியில் நடந்த கூட்டத்தைஅடுத்து 21-12-43 செவ்வாய்க்கிழமை குரும்பசிட்டியில் மறுமலர்ச்சிச் சங்கத்தின் விசேட கூட்டம் நடைபெற்றது. தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த நவசக்திப் பத்திரிகையின் ஆசிரியர் சக்திதாசன் சுப்பிரமணியன் அவர்கள் முக்கிய பேச்சாளராகக் கலந்து கொண்டார். ஈழகேசரி அதிபர் திரு. நா. பொன்னையா அவர்கள் தலைமை தாங்கினர். கனக. செந்திநாதன் அவர்கள்

சங்கத்தின் சார்பாக வரவேற்புரைநிகழ்த்தினர்.

சக்திதாசன் சுப்பிரமணியன் அவர்கள் ''வீரர் நாட்டின் வீழ்ச்சி'' என்ற தலைப்பில் அருமையானதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர். பண்டிதர் வ. நடராசா அவர்கள் ''உரிமையும் கடமையும்'' என்னும் பொருள் பற்றிப் பேசினர்கள்.

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் தொடங்கிய ஏழு மாதங்களுக்கிடையே பாரதி விழா, விபுலானந்தர் வரவேற்பு விழா, நாவலர் விழா, சக்திதாசன் சுப்பிரமணியனை கலந்து கொண்ட விசேட பொதுக்கூட்டவிழா ஆகியவற்றைச் சிறப்புற நடாத்தி முடித்தது. அங்கத்தவர்களிடை சிறு சிறு மனவேற்றுமை கொண்டிருந்தாலும் பெரிது படுத்தாமல் உற்சாகத்தோடு வேலை செய்தனர். அக்காலத்தில் - ஆம் முப்பது வருடத்துக்கு முன்-இலக்கிய அன்பர்களின் இதயத்துடிப்பு — கூட்டுமுயற்சி - ஏதாவது செய்ய வேண்டுமென்னும் ஆர்வம் இவற்றை நினைக்கும் போது மனம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்கிறது. ●

## புதிய நூல்

குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் தமிழ், தமிழர் என்ற உணர்ச்சி வெள்ளத்தில் நனைந்து போயிருப்பவர். 'உலகத் தமிழர் பாதுகாப்புக்கழகம்' என்று ஒரு அமைப்புத் தோன்றவேண்டுமென்ற தமது கனவு நனவாகாதா என்று ஏங்கிக்கொண்டிருப்பவர். இவருடைய இந்த உணர்ச்சியின் காரணமாக வெளிவந்திருக்கிறது 'அலைகடல்களுக்கு அப்பால் தமிழர்' என்ற சிறிய நூல். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, மொறீசியஸ் பீஜி, தென்னபிரிக்கா, றினிட்டாட், டொபேக்கோ, மாட்னிக் முதலிய பல நாடுகளில் இன்று தமிழ் மக்கள் அவ்வத்தேசக் குடிமக்களாக வாழ்ந்து வந்த போதிலும், பல கோடிமக்கள் உள்ள இனமாக இருந்த போதிலும், தமிழர்களுக்கென்று சொந்தமாக ஒரு தனி நாடு இல்லாதது பெரிய குறைதான். இது நீக்கப்பட வேண்டிய குறை என்பதில் பொதுவாக எவருக்கும் ஆட்சேபனை இருக்காது. ஆனல் நீக்க முடிந்த குறையா என்பது சிந்தனைக்குரிய விஷயம். இரா. கனகரத்தினம் உலகெங்கும் தமிழர்களுக்கு முன்பு இருந்த பெருமைத் தொடர்புகளைப் பற்றியும், வெவ்வேறு நாடுகளில் வாழும் இன்றைய தமிழர்களின் நிலைமையும் இந்நூலில் சுருக்கமாகத் தந்திருக்கிறர். எல்லாத்தமிழர்களும் அவசியம் படிக்கவேண்டிய நூல். இதனையே இன்னும் விரிவாக, அந்த நாடுகள் ஒவ்வொன்றுக்கும் சென்று அங்குள்ள மக்களுடன் சிறிது காலம் தங்கி ஆராய்ந்து யாராவது விரிவாக எழுதினல் மிகச் சுவையாகவும் பயனுள்ளதாகவும் இருக்குமே என்று தோன்றுகிறது எனக்கு. (கிடைக்குமிடம்: கலைவாணி புத்தக நிலையம், 130, திருகோணமலை வீதி, கண்டி. விலை: தபாற் செலவுடன் ரூபா. 1-40)



அமைச்சர் குமாரசூரியர் வேலணைக்குச் சென்றபோது தமிழர் கூட்டுமுன்னணி கறுப்புக் கொடி காட்டிற்று. அதன்பிறகு அமைச்சர் இலங்கரத்தினமட்டக் களப்புக்குப் போயிருக்கிறார். ஆனால் அங்கே கறுப்புக்கொடி என்ற பிரச்சினையே எழவில்லை! மட்டக்களப்பின் செல்வர் இராசதுரை வெறும் 'சொல்'லின் செல்வர்தானா? அல்லது இந்தக் கறுப்புக்கொடி விவகாரம் அவருக்குப் பிடிக்கவில்லையோ? அல்லது ... ...

வரவிருக்கும் காங்கேசன் துறை இடைத்தேர்தலில் செல்வநாயகத்துடன் போட்டி போடக்கூடுமென எதிர்பார்க்கப்படுபவர் தோழர் வ.பொன்னம்பலம். நிச்சயமாகத் தோற்றுப்போவேன் என்று தெரிந்தாலும் தமது கட்சியின் கட்டளைக்குப்பணிந்துதோல்வியையும் மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளக்கூடிய மனஉரமுள்ளவர் பொன்னம்பலம்தான்! தோழரும் செல்வாவும் சமீபத்தில் ஒரே மேடையில் பேசியிருக்கிறார்கள். தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளைப்பற்றி விரிவாக எடுத்துக்கூறினார் செல்வநாயகம். அதன்பிறகுபேசிய பொன்னம்பலம் ஒரு இடத்திலாவது செல்வாவுடன் மோத நினைக்கவில்லை. தமக்குக்கொடுக்கப்பட்ட 'சோவியத் நாட்டில் தேசிய இனப்பிரச்சினை' என்ற விஷயத்தை மட்டுமே பாதை தவறாமல் பேசி முடித்தார். இதற்குப்பெயர்தான் 'கண்ணியம்!'

கேள்வி—பதில்
வெள்ளி
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

கடந்த இருபத்தேழு ஆண்டுகளாக வியட்நாம் தேசத்தில் செய்து வந்த சண்டித்தனத்தை இப்போதுதான் அமெரிக்கா நிறுத்தியிருக்கிறது. 'வியட்நாமை நிரந்தர யுத்தபூமியாக்கி விட்ட சிறுமை உலக சரித்திரத்தில் அமெரிக்காவை நீண்டகாலத்துக்குக் கறைப்படுத்திவைக்கும்' என்று சென்ற இதழில்தான் எழுதியிருந்தேன். காகம் இருந்த போது பனம் பழமும் விழுந்து விட்டது!

யாழ். அரசாங்க அதிபர் விமல் அமரசேகரா பற்றி முன்னரும்குறிப்பிட்டிருக்கிறேன், யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பொதுவைபவங்களில் தமிழ்மொழியில் பேசித்தமது பரந்த மனப்பான்மையை வெளியிட்டு வரும் இவர், இப்போது யாழ். கச்சேரியிலுள்ளசிங்களஊழியர்களுக்குத் தமிழ் படிப்பிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார். இப்படிப்பட்டவர்கள்தான் இந்த நாட்டில் பெரிய பிளவு ஏற்படவிடாமல் காத்துவருகிறார்கள்!

# கேள்வி பதில்

“சாமிஜீ”

ஏ. எஸ். ராஜன், சித்தன்கேணி.

★ நடிகை பாரதியின் விலாசம் என்ன? காலதாமதம் ஆனதற்கு மன்னிக்கவும்.

நடிகை பாரதியோடு எனக்கு எவ்வித தொடர்பும் இல்லை. அவருடைய விலாசமும் என்னிடம் இல்லை. தயவுசெய்து மன்னிக்கவும்.

செ. அருள்மோகன்,
காங்கேசன்துறை.

★ 'மாணவர் தி. மு. க' போன்று இலங்கையிலும் 'மாணவர் தமிழர் கூட்டணி' ஒன்று அமைத்தால்...............!

தமிழ் நாட்டில் மட்டுமல்ல. உலகின் பல நாடுகளிலும் மாணவர் கூட்டணிகள் மிகப் பலம் வாய்ந்த சக்திகளாக விளங்கி வருகின்றன. தமிழர் கூட்டணிக்கு எதையும் 'கட்டி அமைக்கும்' ஆற்றல் குறைவாக இருக்கிறது. அன்றியும் கூட்டணியின் 'அஹிம்சை வழி போராட்டம்' மாணவர்களுடைய துடிப்போடு அவ்வளவாக ஒத்துப்போவதில்லை.

ப. பிரபாகரன், யாழ்ப்பாணம்.

★ இன்று ஆட்சியிலிருக்கும் கட்சிகளினுள் பிளவு ஏற்படுமா?

பிளவு ஏற்பட்டது. ஆனால் சிதறிப் போய்விடாமல் பூசி மெழுகி விட்டார்கள்! இந்த ஒட்டு நிலைக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இ. சி. ஜெயபாலேந்திரா,
கொக்குவில்.

★ தற்போதய ஆட்சியில் பணக்காரர் மத்தியதர வர்க்கத்தினராக மாற; மத்தியதர வர்க்கத்தினர் ஏழைகளாக; ஏழைகள்பிச்சையெடுத்தும் வாழ முடியாதவர்களாகப் போகிறார்களே?

சரிதான். பிச்சையெடுத்தும் வாழமுடியாதவர்கள் என்னவாகிறார்கள்? திறமையற்ற அமைச்சர்களாகிறார்கள்! இன்றைய அமைச்சர்களால் அந்நியச் செலவாணியைப் பிச்சையெடுத்துச் சேர்க்கவும் முடியவில்லையே!

பொ. மீனாட்சிசுந்தரம்,
மட்டக்களப்பு.

★ பத்தாண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்தாளர்களுக்கும் இன்றுள்ள தமிழ் எழுத்தாளர்களுக்குமிடையேயுள்ள வித்தியாசமென்ன?

முன்பெல்லாம் தமிழ் எழுத்தாளர்கள் பண்பாடு அது இது என்று 'ஆசார' எழுத்தாளர்களாக இருந்தார்கள். இன்று இந்த உலகத்தோடு சேர்ந்து 'முன்னேறி' விட்டார்கள்!

ஏ. கே. தமிழ்ச்செல்வன்
கொழும்பு—12

★ இன்பமும் துன்பமும் சந்திக்கும் இடம் எது?

மணவறை!

க. சிவராசா, யாழ்ப்பாணம்.

★ தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு அமைச்சர்களை அழைத்தால் தாங்கள் ஒத்துழைக்கமாட்டோமென்று தமிழர் கூட்டுமுன்னணியின் சார்பில் அமிர்தலிங்கம் அறிவித்திருக்கிறரே! கறுப்புக்கொடி பிடிப்பார்களா?



பிடிக்கமாட்டார்களென்றே நம்புகிறேன். ஆனல் அவர்கள் விழாவில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிவிடக்கூடும். முக்கியமான தமிழ்த்தலைவர்கள் எல்லாரும் ஒதுங்கிவிட்டால் விழா சோபிக்காது!

கை: அம்மன்கிளி, பொலிகண்டி.

★ ஒருவர் தனிமையாக இருக்கும் போதும் சரி. பிறருடன் கதைக்கும் போதும் சரி நடக்கும் போதும் சரி, எப்போதும் புன்சிரிப்புடனேயே காணப்படுகிறர். இவரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

'ஐயோ, பாவம்!' என்று நினைக்கிறேன்.

க. கதிர்காமநாதன்,
காங்கேசன்துறை.

★ இன்றைய ஜனநாயகத்தில் மக்களின் நிலை என்ன?

மக்களில் பலர் 'ஜன'ங்களாக இருக்கிறர்கள். சிலர் 'நாயக'ங்களாக இருக்கிறர்கள்!

ராஜன் சிவா, யாழ்நகர்

★ வருங்காலத்தில் தமிழ் நாட்டில் பலம் வாய்ந்த கட்சியாக எக்கட்சி விளங்கும்?

தி. மு. க தான் இன்னும் சில காலத்துக்காவது பலமுள்ள கட்சியாக இருக்கும் அங்கே!

எச் எம் சலீத் பங்கொள்ளாமடை.

★ மனிதனுககு இனிக்கும் பூ எது?

கலப்பு, கல்ப்பு! (ஊ)

இ. மாணிக்கரட்னம், லண்டன்.

★ நீங்கள் இலங்கையின் பிரதமரானல் இன, மத, மொழி வேறுபாட்டை நீக்க என்ன செய்வீர்கள்? (முக்கியமாகத் தமிழர் பிரச்சினை)

முதலில் தமிழர் கூட்டுமுன்னணிக்குத் தடை விதிப்பேன். அதே சமயம் தமிழ் மொழிக்கு சிங்கள மொழியுடன் சம அந்தஸ்து அளிப்பேன், தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தையும், சிங்களப் பாடசாலைகளில் தமிழையும் முதலாம் வகுப்பிலிருந்தே கட்டாய பாடமாக்குவேன். எந்த ஒரு பகுதி மக்களாவது விரும்பிக் கேட்டால் அவர்களுக்கு மாநில சுய ஆட்சி வழங்கி விடுவேன்! — போதுமா?

**செல்வி பராஜோதி, புங்குடுதீவு-1**
**(பரிசுக் கேள்வி)**

★ அரசியல்வாதியை எதற்கு ஒப்பிடலாம்?

புத்தகத்திற்கு ஒப்பிடலாம். புத்தகங்களில் திருக்குறளும் இருக்கிறது. 'மங்களநாயகியின் மர்மக் கொலை'யும் இருக்கிறதல்லவா!

மு. வேலாயுதம், திருகோணமலை

★ 'அஹிம்சைப் போராட்டம்,' என்கிறார்களே, அது எப்படி இருக்கும்? பலன்கிடைக்குமா?

உலகத்தின் பார்வையில் தம்மீது பச்சாத்தாபம் உண்டாகச் செய்வதின் மூலம் எதிரியைப் பணிய வைப்பதுதான் அஹிம்சை வழிப் போராட்டம். ஆயுத பலம் இல்லாதவர்களுக்கு இந்த வழியை விட்டால் வேறுவழியில்லை. ஆனால் மகாத்மாகாந்திக்குப் பிறகு இந்த அஹிம்சை வழிப் போராட்டத்துக்கு மதிப்பு இருப்பதாகத் தெரியவில்லையே!

பி. செல்வராசா கொழும்பு-6

★ உலகில் மிக விலைஉயர்ந்த பொருள் எது?

தங்கம், வைரம், என்று சொன்னாலும் தவறு. ஏதாவது ஒரு பொருளுக்கு அத்தியாவசிய தேவையிருந்து, அது கிடைப்பது மிக அரிதாக இருக்குமானால் அவ்வப்போது அதுவே மிக மிக விலையுயர்ந்த பொருளாகிவிடும்!

செல்வி. வசந்தி இராமநாதர், அல்வாய்

★ டாக்டர் என். எம். பற்றி சில வரிகள்?



ஒரு காலத்தில் மதிப்புமிக்க மக்கள் தலைவராக விளங்கிய என். எம். இன்று அதிகாரவர்க்கத்தின் இரும்புச் சுத்தியைப் போலக் காணப்படுகிறார்!


வரதர் வெளியீடு

கவிஞர்: 'முருகையன்' எழுதிய

**'ஒரு சில விதி செய்வோம்'**

(கவிதைச் சிந்தனைகள்)

★ ஒவ்வொரு கவிஞரும் படிக்க வேண்டிய நூல்.

★ ஒவ்வொரு விமர்சகரும் படிக்கவேண்டிய நூல்.

★ ஒவ்வொரு இலக்கிய ரசிகரும் படிக்க வேண்டிய நூல்.

விலை ரூபா 3—00

(தபாற் செலவு சதம் 60)

விற்பனையாளர் :

**ரகுநாதன் பதிப்பகம்**

**303, காலி வீதி, கொழும்பு-3**



சமீபத்தில் அறிஞர் அண்ணாவின் நினைவுதினம் கொண்டாடப்பட்டது. கருணாநிதி தலைமையில் ஒரு ஊர்வலமும், எம். ஜி. ஆர். தலைமையில் இன்னொரு ஊர்வலமுமாக இரண்டு ஊர்வலங்களில் சென்று மக்கள் அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள். மறைந்த தலைவருக்காக உண்மையில் அஞ்சலி செலுத்தியவர்கள் எத்தனைபேர்? தத்தமது கட்சிகளை வளர்ப்பதே இந்த ஊர்வலங்களின் முக்கிய நோக்கமாக இருந்திருக்கும்!

பத்திரிகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் நன்மை தீமை ஒருபுறமிருக்கட்டும். இது சம்பந்தமாக சபாநாயகர் ஸ்ரான்லி திலகரத்தினா அரசுக்குப் பாதகமாகத் தீர்ப்புக் கூறியதும் டாக்டர் என். எம். சீறிப்பாய்ந்தாரே, — அந்தச் செய்கை மிகவும் கேவலமானது. ஜனநாயகமே அந்த இடத்தில் உயிரை விடப்பார்த்தது. நல்லவேளை, பிரதமர் தக்க சமயத்தில் தலையிட்டு ஜனநாயகத்தின் உயிரைக் காப்பாற்றி வைத்திருக்கிறார்!

கீரிமலை அபிவிருத்திக்குப் பணம் திரட்டுவதற்காக தமது நண்பரான எம். ஜி. ஆரை இலங்கைக்கு அழைக்கப் போவதாக தோழர் பொன்னம்பலம் அறிவித்திருக்கிறார். அரசியல் காரணங்களுக்காக எம். ஜி. ஆரை அழைக்கவில்லையென்று வி. பி. சொல்லியிருக்கின்ற போதிலும் இங்கு தங்கியிருக்கும் நேரத்தில் எம். ஜி. ஆரின் வாயிலிருந்து எதையாவது பிடுங்குவதற்கு பத்திரிகைக்காரர்கள் முயற்சிப்பார்கள். எம். ஜி. ஆர் 'ஏதாவது' சொல்லப்போக, அது எம். ஜி. ஆருக்குத் தொந்தரவு தருவதாக அமையலாம். ஒரு வேளை தோழர் பொன்னம்பலத்துக்கே தர்ம சங்கடமான நிலைமை ஏற்படலாம்!

---



# அன்புடன் சில வார்த்தைகள்

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் நாள் தோறும் 'வெள்ளி'க்குக் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. பாராட்டி எழுதுகிறவர்கள் பலர். கண்டித்து எழுதுகிறவர்கள் சிலர். எல்லோரும் வெள்ளி மீது கொண்ட அபிமானத்திலேயே எழுதுகிறார்கள். அளவுக்கு மிஞ்சிய தபாற் செலவைக் கருதி வெளிநாடுகளுக்கு வெள்ளியை நான் அனுப்புவதில்லை. அப்படியிருந்தும் கூட இந்தியாவிலிருந்து அவ்வப்போது சில அன்பர்களின் கடிதங்கள் வரும். இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையில் தினந்தோறும் நூற்றுக்கணக்கானவர்கள் பயணம் செய்கிறார்கள், அவர்களில் ஒரு சிலராவது 'வெள்ளி'யைத் தமிழகத்திற்கு எடுத்துச் செல்லக்கூடும். இதைவிட, மலேசியாவிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும் கூட மிக அருமையாகக் கடிதங்கள் வருகின்றன. மலேசியா கோலாலம்பூரிலிருந்து எழுதிய எம். கே. எம், முத்தமிழ்ச்செல்வன், வெள்ளியைப் பாராட்டிக் கவிதையே எழுதியிருக்கிறார். அவருடைய கவிதையின் முதற்பாட்டு இது:

வெள்ளி யென்றால் எம்மூரில் விழுந்தடித்து ஓடுவார்
வெள்ளி யென்றால் எங்கள் முகம் விரிவடைந்து மலர்ந்திடுமே
வெள்ளி யென்றால் கிழமை யென்று விட்டிடுவீர், அதுதவறு
வெள்ளி யென்றால் எம்மூரில் விரும்பும் பணம் அறிந்திடுவீர்!

இலங்கையில் ரூபா என்பது பணத்தைக் குறிப்பதுபோல, மலேசியாவில் வெள்ளி என்பது பணத்தைக் குறிக்கிறது. இந்தப் பாடலைத் தொடர்ந்து முத்தமிழ்ச் செல்வன் வெள்ளி சஞ்சிகையையும் என்னையும் பாராட்டி இரண்டு பாடல்கள் எழுதியிருக்கிறார்.

லண்டன் குயீன் மேரி கல்லூரியிலிருந்து இ. மாணிக்கரட்ணம் ஒரு நீண்ட கடிதம் எழுதியிருக்கிறார். இவர் வெள்ளியை ஆரம்பகாலத்திலிருந்தே தொடர்ந்து படித்துவந்தவர். சமீபத்தில் தான் லண்டன் சென்றிருக்கிறார். பல மாதங்களுக்கு முன் வெள்ளியில் நான் எழுதிய 'குறிப்புகள் பலவற்றைச் சுட்டிக்காட்டி எம், ஜி. ஆர் விஷயமாக நான் 'நடுநிலை' தவறிவிட்டதாக் அன்போடு குற்றம் சாட்டியிருக்கிறார். இவர் ஆறு கேள்விகளையும் எழுதியிருக்கிறார். அதில் ஒரு கேள்விகு மட்டும் 'சாமிஜி'யின் பதில் இந்த இதழில். வெளியாயிருக்கிறது.

எனக்கு கடிதம் எழுதும் அன்பர்கள்தான் என்னை மென் மேலும் உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் எவருக்குமே நான் தனிப்பட்ட முறையில் கடிதங்கள் எழுதாத போதிலும், அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டவனாயிருக்கிறேன்.

*தி. ச. வரதராசன்*




எமது புதிய கிளை நிலையம்:

**ராணி ஆபரண மாளிகை**

63, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.